மக்கள் குரல்
நடுநிலை நாளேடு ஆசிரியர் : எஸ்.எஸ்.
சென்னை ◦ மதுரை ◦ கோயம்புத்தூர்
21/12/2011

# சாய்ராம் ஆயுர்வேத கல்லூரி நடத்திய சர்வதேச 'அஸ்வினி' மருத்துவ மாநாடு

சென்னை, டிச.21-

ஸ்ரீசாய்ராம் ஆயுர்வேத மருத்துவ கல்லூரி சார்பில் அஸ்வினி 2011 என்ற தலைப்பில் சர்வதேச ஆயுர்வேத மருத்துவ மாநாடு சென்னையில் நடந்தது.

சேத்துப்பட்டில் உள்ள சின்மயி மகாலில் கல்வி குழுமத்தின் தலைவர் அமிர்தா லியோமுத்து மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி சாய் பிரகாஷ் லியோ முத்து ஆகியோர் முன்னிலையில் செயலாளர் வாசு மற்றும் கல்லூரி முதல்வர் டாக்டர் வனிதா முரளிகுமார் ஆகியோர் தலைமையில் ஆயுர்வேத கருத்தரங்கு நடந்தது.

மாநாட்டில் மத்திய இந்திய மருத்துவ தலைமை கழகத்தின் தலைவர் ரகுநந்தன் சர்மா சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக ஏ.வி.பி. குழுமத்தின் தலைவர் கிருஷ்ணகுமார் பங்கேற்றார். மத்திய இந்திய மருத்துவ தலைமை கழகத்தின் துணைத்தலைவர் தியாகி, மலேசியா டிரெடிஷனல் மற்றும் காம்ப்ளிமெண்ட்ரி போர்டு தலைவர் டாக்டர் சீபாங்லீ ஆகியோர் பேசினார்கள். முடிவில் ஒருங்கிணைப்பாளர் சதீஷ்குமார் நன்றி கூறினார்.

மாநாட்டில் ஆயுர்வேத மருத்துவத்தின் சிறப்பு சிகிச்சை பற்றிய கருத்தரங்கும் நடந்தது.

மாநாட்டில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுர்வேத மருத்துவ மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர்.